# பயணம்

**ப.சொக்கலிங்கம்**
**10.09.2022**

"அப்பா,லண்டன் விசா பிராசஸ் முடிஞ்சு, பாஸ்போர்ட்ட நம்ம வீட்டுக்கு கொரியர்ல அனுப்பிட்டதா மெயில் வந்திருக்கு" என்று,அருகில் செய்தித்தாள் படித்துக் கொண்டிருந்த தந்தை பரதனிடம் கூறினான் விச்சு.

பரதன் செய்தித்தாளை மேஜையில் மடித்து வைத்துவிட்டு, பேன் காற்றில் பறக்காமல் இருக்க, ஒரு புத்தகத்தை அதன் மேலே வைத்தவாறே,"வெரி குட்றா விச்சு.விசா ஸ்டாம்ப் ஆகியிருக்கும்ல" என்றார்.

"பாஸ்போர்ட் கைல வந்தாதான் தெரியும்பா" என்றான் விச்சு.

"சரி.அந்த மெயில ஒரு பிரிண்ட் எடுத்து உன் போல்டர்ல போட்டுக்க. ஹையர் ஸ்டடீஸ் படிக்க வர்றவங்களால, யு கே கவர்மண்டுக்கு வருமானம்தான். கண்டிப்பா விசா ஸ்டாம்ப் பண்ணியிருப்பான். கவலைப்படாதே.."

"சரிப்பா "

"என்னைக்குடா பாஸ்போர்ட் நம்ம கைக்கு வந்து சேரும்"

"ரெண்டு நாள்ல வந்திரும்பா"

பரதன் தமிழக அரசுப் பணியில் இருந்து ஓய்வு பெற்றவர்.அடையாறில் அடுக்குமாடிக் குடியிருப்பில் பிளாட் வாங்கி செட்டில் ஆகிவிட்டார். கை சுத்தம். கறார் பேர்வழி. ஆபிஸ்ல ரூல் படி வேலை பார்ப்பார்.

மனைவி சுசிலா இல்லத்தரசி. விச்சு இவர்களின் ஒரே வாரிசு.

சென்னையில் பி.டெக் கம்ப்யூட்டர் சயின்ஸ் முடித்து விட்டு, லண்டனில் மாஸ்டர்ஸ் படிக்க அப்ளை பண்ணியிருந்தான். அட்மிஷன் கிடைத்து விட்டது. அடுத்த வாரம் பிரிட்டிஷ் ஏர்வேஸில் லண்டன் செல்ல டிக்கெட் எடுத்து விட்டான். விசா கைக்கு வரவேண்டியதுதான் பாக்கி.

"விச்சு, மறக்காம யூனிவர்சிட்டி அட்மிசன் லெட்டர், அது சம்பந்தமான கரஸ்பான்டென்ஸ் எல்லாம் பிரிண்ட் எடுத்து வச்சுக்கோடா".

"எத்தனை தடவைத்தான் சொல்லுவீங்கப்பா. ஏற்கனவே எடுத்து வச்சாச்சு".

"டிக்கட் எடுக்கும்போது ஸ்டூடென்ட் ஆப்சன் டிக் பண்ணினாயா. அப்பத்தான் ரெண்டு செக்கின் பேக்கஜ் இலவசமா விடுவான்"

"பண்ணிட்டேன்பா"

"சாப்பாடு ஏசியன் வெஜிடேரியன்தானே போட்டே"

"ஆமாம்பா"

"சாப்பிடும் முன்னாலே ஒரு தடவ செக் பண்ணிட்டு சாப்பிடு. நான் வெஜிடேரியன் மாத்தி கொடுத்துறப் போறா”

“வாக்சின் சர்டிபிகேட் நாலு கலர் பிரிண்ட் எடுத்து ஒவ்வொரு பெட்டிலேயும் ஒவ்வொன்னு போட்டுரு”

“சரிப்பா”

“எர்லைன்ஸ்ல RTPCR டெஸ்ட் கேக்குறானா”

“இப்ப தேவையில்லப்பா.செக் பண்ணிட்டேன்”

இரண்டு நாள் கழித்து விசா ஸ்டாம்ப் பண்ணிய பாஸ்போர்ட் வந்தது.

உடனே,பரதன் போனை எடுத்து, நெடுங்காலமாய் லண்டனில் வசிக்கும் தன் தங்கை மகன் ராஜாவை வாட்ஸாப் காலில் கூப்பிட்டார்.

தூக்கக் கலக்கத்தில் ராஜா,"என்ன விஷயம் மாமா .விசா ஸ்டாம்ப் ஆயிடுத்தா" என்றான்.

"அதைச் சொல்லத்தான்டா கூப்பிட்டேன்.அங்கே விடிஞ்சாச்சா"

"இல்ல மாமா ,நடு ராத்திரி மூணு மணி "

"சாரிடா.போன வச்சிடுறேன்"

ராஜா லண்டன் ஹீத்ரூ ஏர்போர்ட்டில், விச்சுவை பிக்கப் பண்ணி சென்ட்ரல் லண்டனில் இருக்கும் தன் வீட்டுக்கு கூட்டிச் செல்வதாக பரதனிடம் ஒப்புக் கொண்டிருந்தான்.

கொஞ்ச நாள் ராஜா வீட்டில் தங்கியிருந்து, விச்சு, தான் தங்குவதற்கு நெட்டில் பார்த்து வைத்திருந்த இடங்களை பார்வையிட்டு, யூனிவர்சிட்டிக்கு அருகில்,பட்ஜெட்டுக்கு ஒத்துப்போகும் ஹாஸ்டல்களில், ஒரு இடத்தைத் தேர்வு செய்து,அதில் தங்க ஆரம்பிக்க வேண்டும் என்பது பரதனின் ஏற்பாடு.

அடுத்து டிராவெல்ஸ் கம்பெனி நடத்தும் நண்பர் லாரன்சுக்கு போன் பண்ணினார்.

"லாரன்ஸ், விச்சுக்கு விசா வந்தாச்சு.பவுண்ட்ஸ் ஏற்பாடு பண்ணணுமே"

"பரதா,மதியம் ஆள் அனுப்பி டாக்குமெண்ட்ஸ் வாங்கிக்கிறேன்.சாயந்திரம் பவுண்ட்ஸ் உன் கைல இருக்கும்"

"தாங்ஸ்டா"என்றவாறே போனை ஆஃப் செய்தார் பரதன்.

விச்சுவைப் பார்த்து "விச்சு, ஏர்டெல் இன்டர்நேஷனல் ரோமிங் பேக்கஜ் எடுத்திட்டாயா"

"எடுத்தாச்சுப்பா. லண்டன்ல ஏர்டெல்லும் ஒர்க் பண்ணும். விசாக்கு போன சமயத்தில வாங்கின யு .கே சிம்மையும் நான் லண்டன் போனதும் மாட்டிடுவேன்"

"லண்டன் சிம் நம்பரை என் போன்லேயும், அம்மா போன்லேயும் சேவ் பண்ணிட்டயா

"பண்ணிட்டேன்பா "

மாலை பவுண்ட்ஸ் வந்து சேர்ந்தது.

அடுத்த நாள்,பரதனும், விச்சுவும் பாரி முனை பூக்கடை பஜார் சென்று,தெர்மல்ஸ், குளிர் தாங்கும் ஜாக்கெட், ரோஷனில் இரண்டு பெரிய பெட்டி, ஒரு பேக்பாக் எல்லாம் வாங்கி வந்தனர். கழுத்தில் தொங்கும்படியான பாஸ்போர்ட் பௌச்சை பரதன், தேடி மூன்றாவது கடையில் வாங்கினார்.

"விச்சு , எக்காரணத்தைக் கொண்டும் பாஸ்போர்ட்டை நெக் பௌச்சை தவிர வேற எதிலும் வைக்க வேண்டாம்"

"சரிப்பா"

அமேசானில் லக்கேஜ் வையிங் ஸ்கேல் வாங்கினார்.

பயணத்திற்கு முதல் நாள்.

சுசிலா மகனுக்கு பேக் செய்வதில் உதவியாக இருந்தாள்.

பரதன் விச்சுவிடம் "விச்சு, பெட்டி வெயிட் பாத்துட்டியா. தேவைன்னா ரீ அரேஞ் பண்ணிக்கோ"

"சரியா இருக்குப்பா"

"நேத்திக்கு பிரிட்டிஷ் ஏர்வேஸ் ஸ்டேட்டஸ் பாரு. கரெக்ட் டயத்துக்கு வந்து போச்சா. அப்படியே வெப் செக்கினும் பண்ணிடு"

விச்சு செக் பண்ணிவிட்டு,"அப்பா நேத்திக்கு கரெக்ட் டயத்துக்குக் கிளம்பி போயிருக்கு.வெப் செக்கின்னும் முடிச்சிட்டேன்"

இன்று நள்ளிரவு விச்சு கிளம்புகிறான்.

“பிரிட்டிஷ் ஏர்வேஸ் ஸ்டேட்டஸ் பாருடா”

பாத்துட்டேன்பா.கரெக்ட் டயத்துக்கு கிளம்புது.

விச்சு அம்மாவையும்,அப்பாவையும் நமஸ்கரித்தான்.

பெட்டிகளோடு தரைத்தளம் வந்து,காரில் பெட்டிகளை ஏற்றி வைத்துவிட்டு பரதனும்,விச்சுவும் காரில் ஏறினார்கள்.விச்சு காரை ஓட்டினான்.

"விச்சு ஏர்போர்ட் பார்க்கிங் ஏரியா போயிடு.மேல கேட் கிட்ட பார்க் பண்ண விடமாட்டான்.பார்க்கிங் ஏரியால டிராலி கிடைக்கும்"

"ஓக்கேப்பா "

நள்ளிரவு என்பதால், சாலை காலியாக இருந்தது. அரைமணி நேரம் பயணித்து, ஏர்போர்ட் பார்க்கிங்கை அடைந்தனர்.லேசாகத் தூறல் போட்டுக் கொண்டிருந்தது.

பரதன் வேக வேகமாய் இறங்கிப் போய், ஒரு டிராலியைக் கொண்டுவந்தார்.

டிக்கியில் இருந்த பெட்டிகளை டிராலியில் ஏற்றினார்.

காரைவிட்டு இறங்கிய விச்சு, தூறலில் நனையாதிருக்க, தன் கையில் இருந்தவற்றையெல்லாம் பேக்பாக்கில் போட்டான்.

இருவரும் டிராலியைத் தள்ளிக் கொண்டு, தரைத் தளத்தில் இருந்த லிப்ட்டில் ஏறி, புறப்பாடு ஏரியாவிற்குள் நுழைந்தனர்.

பிரிட்டிஷ் ஏர்வேஸ் நுழைவு வாயிலில் கூட்டம் அதிகமாய் இருந்தது.

"விச்சு, இப்போ எல்லாரும் நம்மள மாதிரி மூணு மணி நேரத்துக்கு முன்னாலேயே வந்திடுறாங்க போல.என்ன கூட்டம் .வரிசைல நில்லுடா"

வரிசை மெதுவாய் நகர்ந்து கொண்டிருந்தது.

பரதன் இடது புறமாய் திரும்பிப் பார்த்தார். ஒரு இளஞ் ஜோடி,காஃபி கடையின் அருகே நின்று கொண்டிருந்தது.அந்த பெண் அழுது கொண்டிருந்தாள்.அவள் கூட இருந்த ஆண் சமாதானப்படுத்திக் கொண்டிருந்தான்.சற்று அருகே, அவர்களின் உறவினர்கள் போன்று தோன்றிய ஒரு கூட்டம் அவர்களை கவலையோடு பார்த்துக் கொண்டிருந்தது.பரதனின் மனதில்,"இப்படியா பொறுப்பில்லாம இருப்பாங்க.கல்யாணம் முடிந்ததுமே,விசா அப்ளை பண்ணி,பொண்ணுக்கும் விசா வாங்காம விட்டுட்டாங்களே.பாவம் அந்த பொண்ணு புருஷனை வழி அனுப்பிட்டு கவலையோடு போகப் போகுது.

விச்சு நின்றிருந்த திசையைப் பார்த்து "விச்சு, டிக்கெட், .பாஸ்போர்ட் கைல வச்சிருக்கியா"

விச்சு கையைத் தூக்கி டிக்கெட்டையும்,பாஸ்போர்ட்டையும் கட்டினான்.

பரதனுக்கு கனத்த குரல். சாதாரணமாய் அவர் பேசினாலே சுற்றி இருப்பவர்களுக்கு நன்கு கேட்கும்.அவர் ரகசியமாய் பேசுவதாக நினைத்துக் கொண்டு , ,வார்த்தைக்கு வார்த்தை அதிக இடைவெளி கொடுத்துப் பேசுவார்.ஆனால் அவர் பேசும் ஒவ்வொரு வார்த்தையும் மற்றவர்களுக்கு நன்கு கேட்கும்.அவருக்கு மட்டும் ரகசியமாய் பேசிய திருப்தி.

“எக்ஸ்ட்ரா N95 மாஸ்க் ஹாண்ட் பாக்ல வச்சிருக்கேல்ல”

விச்சு தலையாட்டினான்.

"விச்சு, செக் இன் முடிச்சதும் ஒரு கால். செக்யூரிட்டி, இம்மிகிரேஷன் முடிஞ்சதும் ஒரு கால் பண்ணு. உன் ரிகாலீயா க்ரெடிட் கார்டுக்கு, லௌஞ் அக்சஸ் கொடுப்பான். ஆனா நீ லௌஞ் போக வேண்டாம். தூங்கிட்டா வம்பு. இம்மிகிரேஷன் முடிஞ்சதும்,நிறைய புட் அவுட்லட் இருக்கும். முக்காவாசி ஜங்க்தான்.ஒரே ஒரு இட்லி அவுட்லட் உண்டு. நான் துபாய் போறச்சே அந்த அவுட்லெட்லதான் இட்லி சாப்பிட்டேன். சாம்பார்ல உப்பு கம்மியா இருந்துச்சு. இன்பார்ம் பண்ணினேன்.சரி செய்வதா சொன்னான்.இப்ப சரியாய்

இருக்கும்னு நினைக்கிறேன்" அங்க மட்டும் சாப்பிட்டுட்டு, பிரிட்டிஷ் ஏர்வேஸ் கேட் முன்னால போய் உக்காந்திரு"

வழக்கம்போல் விச்சு "சரிப்பா" என்றான்.

இந்த சம்பாஷணையை வரிசையில் நிற்கும் அனைவரும் கேட்டுக் கொண்டிருந்தனர்.

விச்சு, கேட் அருகில் வந்து விட்டான்.

பேப்பர்களை செக் செய்துவிட்டு, விச்சுவை உள்ளே அனுமதிக்கும் போது, செக்யுரிட்டி பரதனை எட்டிப் பார்த்து "டோன்ட் ஒரி சாப்" என்றார். இவ்வளவு நேரம் விச்சுவுடன் தான் பேசிக் கொண்டிருந்ததை செக்யுரிட்டி கேட்டுக் கொண்டிருந்தது அவரை நெருடியது.மேலும் தமிழ் தெரியாத செக்யுரிட்டிக்கு தான் பேசியது எப்படிப் புரிந்தது என்ற குழப்பத்தில் பரதன் ஆழ்ந்தார்.

திடீரென பின்னேயிருந்து,"அங்கிள்" என்று ஒரு குரல்.

பரதன் திரும்பிப் பார்த்தார்.

வரிசையின் கடைசியில் நின்று கொண்டிருந்த, விச்சுவின் வயதொத்த முன்பின் தெரியாத ஒரு இளைஞன்,"அங்கிள், கொஞ்சம் இங்க வாங்க" என்று பரதனைப் பார்த்து கூப்பிட்டான்.

பரதன் அவன் அருகே சென்றார்.

"அங்கிள், நீங்க விச்சுகிட்டே பேசிக் கொண்டிருந்ததைக் கேட்டேன். நிறைய யூஸ்புல் இன்பர்மேசன் கொடுத்தீங்க.தேங்க்ஸ் அங்கிள்.பை தி வே, ஐ யாம் அச்சு" என்றான்.

இவன் சீரியஸா பேசுறானா இல்ல கிண்டல் பண்ணுறானா என்ற குழப்பத்தில் "இருக்கட்டும்பா" என்று கூறியவாறே பரதன் அங்கிருந்து நகர்ந்தார்.

கண்ணாடி சுவர் ஓரம் சென்று, விச்சு செக் இன் கவுண்டர் முன் நிற்பதை பார்த்துக் கொண்டிருந்தார்.

செக் இன் முடித்து விச்சு போன் பண்ணினான்.அது போல செக்யுரிட்டி, இம்மிகிரேஷன் முடித்ததும் போன் பண்ணினான்.

"அப்பா நீங்க வீட்டுக்குப் போங்கப்பா"

"போர்டிங் அனௌன்ஸ் பண்ணுனதும் போன் பண்ணு.அப்புறம் கிளம்புறேன்"

"சரிப்பா"

பரதன் சூடாக பில்டர் காஃபி குடித்து விட்டு விச்சுவின் காலுக்கு சேரில் அமர்ந்தவாறே காத்திருந்தார்.

சற்று நேரத்தில் விச்சுவின் கால்.

"போர்டிங் அனௌன்ஸ் பண்ணிட்டான்பா.நீங்க கிளம்புங்கோ"

"சரிடா.சீட்ல போய் உக்காந்ததும் போன ஆஃப் பண்ணிட்டு தூங்கு.அவாளே எழுப்பி சாப்பாடு தருவா.ஹீத்ரோல இறங்கினதும் போன் பண்ணு.ஆன் டைம்னு ராஜாவுக்கு நான் மெசேஜ் பண்ணிட்டேன்.நல்லா படிடா"

"ஓக்கேப்பா.தேங்க்ஸ்"

பரதன் லிப்ட்டில் ஏறி தரைத்தளம் வந்து ,மெதுவாக நடந்து காரை அடைந்தார்.

தூறல் மழையாய் வலுத்திருந்தது. குடை எடுத்து வராததை எண்ணி நொந்தவாறே, கார் சாவியை எடுக்க பாண்ட் பாக்கெட்டில் கை விட்டார்.

சாவி தட்டுப்படவில்லை.

பேண்டின் எல்லா பாக்கெட்களிலும், சர்ட் பாக்கெட்டிலும் தேடினார்.

சாவி கிடைக்கவில்லை.

விச்சுதானே காரை ஓட்டிட்டு வந்தான். ஒருவேளை கார் சாவிய அவன்

பேக்கில போட்டிருப்பானோ.

போனை எடுத்து விச்சுவை கூப்பிட்டார்.

" தாங்கள் டயல் செய்த எண் தற்சமயம் சுவிட்ச் ஆஃப் செய்யப்பட்டுள்ளது" என்று போன் பதிலளித்தது.

---